பல நோயாளிகளை ஒரு வாரம், இரண்டு வாரம் வைத்திருந்துவிட்டு, பிறகு வெளியே அனுப்பிவிடக்கூடிய நிலை இருப்பதை அரசாங்கம் போக்க முயற்சிக்குமா ? அதற்கென்று கமிட்டியொன்று இருப்பதாக நான் அறிகிறேன். அத்தகைய கமிட்டி இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால், எந்த நோயாளி களைச் சேர்க்கலாம் என்பதற்கு ஏதாவது முறை வகுக்கப்படுகிறதா என்ற நிலையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்துறை மருத்துவ மனையைப்பற்றியது. ஆனால், கனம் உறுப்பினர் போடுகின்ற கேள்வியோ வடார்க்காடு மாவட்டத்திலிருக்கும் மருத்துவ மனையைப்பற்றி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

சுவாமிமலையில் வெண்கலச் சிலைகள் தயாரிப்பு.

* 176 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுவாமிமலையில் உள்ள வெண்கலச்சிலை தயாரிப்பு நிலையத்தில் 1967-ம் ஆண்டில் எத்தனை, எத்தகைய சிலைகள் செய்யப்பட்டன ?

(இ) இவற்றால் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) விதவிதமான எழுபத்தெட்டு வெண்கலச்சிலைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

(இ) அந்த எழுபத்தெட்டு வெண்கலச்சிலைகளில் ரூ. 21,206·90 விலையுள்ள ஐம்பது சிலைகள் விற்பனை செய்யப்பட்டன. இதனால் ரூ. 1,276·94 லாபம் கிடைத்தது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, கடவுள் உருவம் பதித்த சில சிலைகளுக்கு வெளி நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கும் காரணத்தால் தமிழகத்திலுள்ள அத்தகைய சிலைகளைச் சில பேர் திருடி வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள் என்பது உண்மையா ? அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருடுகின்றதையும் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் இத்தகைய சிலைகளையும் திருடுவதை மேற்கொண்டிருக்கலாம். அதையெல்லாம் தடுக்க அப்போதைக்கப்போது நம்முடைய காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

New College for Rajapalayam

* 177. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) the number of colleges in the various districts under the jurisdiction of Madurai University;

(*b*) whether any representation has been received recently from Rajapalayam for the starting of a college; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு செ. மாதவன் :

(அ)	மதுரை	14
	திருநெல்வேலி ..	17
	இராமநாதபுரம் ..	9
	கன்யாகுமரி ..	8
		48

1969 மார்ச் 5]

(இ) இல்லை.

(உ) கேள்விக்கிடமில்லை.

திரு கரு. சீமைச்சாமி : ராஜபாளையம் ஒரு பெரிய நகரம். அங்கே கல்லூரி இல்லாமலிருப்பதால், அங்குள்ள மக்கள் அங்கு ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று முன்வருவார்களானுல், அதற்காக அரசாங்கம் நிதி உதவி கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கனம் உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்ததற்குப் பின்னுல் அதுபற்றிக் கேட்கலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர், சார். நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலுகாவில் கள்ளிகுளம் என்ற ஊரில் கௌசானல் கல்லூரி என்ற பெயரில் ஒரு கல்லூரி நடந்துவந்தது. ஆனுல், நடப்பு ஆண்டில் நிதிப் பற்றுக்குறை காரணமாக அது நடைபெறவில்லை. ஆகவே, புதிய கல்லூரிகளை ஆரம்பிக்கும் இந்த நேரத்தில், இப்படி நடந்து கொண்டிருந்த ஒரு கல்லூரிக்கு அரசாங்கம் சற்று அதிகமாக உதவி அளித்து, அதைத் திரும்பவும் நடைபெறச் செய்வதற்கான செயற்குறிப்பை இந்த அரசு கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கல்லூரியைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனுல், பழைய கல்லூரியைத் திரும்பத் தொடங்கச் செய்யவேண்டும் என்ற நல்ல கருத்தைச் சொன்னுர்கள். அவ்வாறு சொன்னது பாராட்டுக்குரிய செய்தியாகும். நேற்று வேருெரு அவையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினரொருவர், புதிய கல்லூரிகளை உடனே திறக்க வேண்டும் என்று சொன்னுரே தவிர, மற்றதைப்பற்றிச் சொல்லவில்லை. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசாங்கம் நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை பல்கலைக் கழகத்தின் வரம்பிற்கு உட்பட்ட மற்ற இடங்களிலிருந்து கல்லூரி திறக்கவேண்டும் என்று மனுக்கள் வந்தனவா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இருக்கும் கல்லூரியைப்பற்றித் தகவல் இருக்கிறது. மனுக்கள் வந்தவற்றைப்பற்றித் தகவல் இல்லை.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே மதுரைப் பல்கலைக் கழக வரையறைக்கு உட்பட்ட பகுதிகளில், அரசுத் தரப்பிலிருந்து இந்த ஆண்டு புதிய கல்லூரி ஏதாவது ஆரம்பிக்க திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : அது பற்றித் தகவல் இல்லை.

திரு பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருவாரூர் நகரில் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ? குறிப்பாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலாவது அந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆண்டு தோறும் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன. இந்த ஆண்டு நான்கு கல்லூரிகள் திறக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்த எந்த ஊருக்கு என்பது பின்னர்தான் முடிவு செய்யப்படும்

New High Schools in Chingleput district

* 178 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the